# பழைய மாணவர் சங்கத்தின்
# யாப்பு (தமிழ் மொழி)
# ஸாஹிரா கல்லூரி, மாவனல்லை

# பழைய மாணவர் சங்கத்தின் யாப்பு ஸாஹிரா கல்லூரி, மாவனல்லை

**முன்னுரை**

மாவனல்லை ஸாஹிரா கல்லூரியானது, அதன் ஆரம்பம் தொட்டே கலப்புப் பாடசாலையாக இருந்து வந்துள்ளது. ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு பாலாருக்கும் ஸாஹிரா கல்வி புகட்டியுள்ளது. எனினும், அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் ஏனைய பின்னிணைப்புகளுக்கு அமைவாக, பழைய மாணவர் சங்கத்தை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு பழைய மாணவர்களுக்கென இந்த யாப்பு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

2023 ஒக்டோபர் 22ஆம் திகதி நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் நாம் மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திற்கான நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டோம். மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் ஒன்றுபட்ட பழைய மாணவர் சங்கத்தின் கீழ் அனைத்து உறுப்பினர்களும் உள்ளடங்குவார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், சங்கத்தின் முன்னேற்றத்திற்கும், கல்லூரி மற்றும் உறுப்புரிமையின் நன்னலன்களை முதன்மைப்படுத்தி சங்கத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதற்கும், சங்கத்தின் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்கள் பாடசாலைக் கொடியையும் கீர்த்தியையும் உயர்த்திப் பிடிப்பதற்காக செயலாற்றக்கூடியவர்கள் மற்றும் செயலாற்றும் ஆற்றல் படைத்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கும், நடைமுறைகளில் தொடர்ச்சியையும் நிலைத்த தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கும், அதன் விவகாரங்களை நெறிப்படுத்தும் நோக்கோடு அதன் சங்கத்திற்கான இந்த ‘யாப்பை’ கோவைப்படுத்துவதற்கு எமது உறுப்பினர்களின் பூரண அனுமதியையும், பணிப்பாணையையும் பெற்றுள்ளோம். சங்கத்தின் உச்சபட்ச பெறுபேறானது, அதன் உறுப்பினர்களால் மட்டுமன்றி, அதன் அனைத்துப் பங்குதாரர்களின் ஊடாகவுமே சாத்தியப்படும் என்பதை இந்த திருத்தியமைக்கப்பட்டுள்ள யாப்பில் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள அடைவுகள் உறுதிப்படுத்தும். திருத்தியமைக்கப்பட்ட இந்த யாப்பு பழைய மாணவர் சங்க உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டு, தழுவிக்கொள்ளப்பட்ட பின்னர், “பழைய மாணவர் சங்கத்தின்” விவகாரங்களை வழிநடத்தும் “துருவ நட்சத்திரமாக” இது செயற்படும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாகப் பொறுப்பேற்றுள்ள நாம், எல்லாம் வல்ல இறைவனை சாட்சியாகவும் எமது நேசத்திற்குரிய இறைத்தூதரைத் தலைவராகவும் கொண்டு, உன்னதமான இப்பணிக்கான எமது சங்கத்தின் மீயுயர் நிர்வாகத் தத்துவங்களைப் பின்வருமாறு முன்வைக்கிறோம்.

## 1. பெயர்

இச்சங்கமானது "**மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம்**" என அழைக்கப்படும் (இதன் பின்னர் "சங்கம்" அல்லது "ப.மா.ச. - ஸா.க.மா." என்ற மாற்று வாசகங்களால் குறிக்கப்படுவதும் இதுவே)

## 2. தொலைநோக்கு

***"பாடசாலைக்கும் சமூகத்திற்கும் சேவையாற்றுவதற்காக இலங்கையில் ஓர் உயிரோட்டமுள்ள பழைய மாணவர் சங்கமாகத் தடம்பதித்தல்"***

## 3. நோக்கக்கூற்று

***பழைய மாணவர் சங்கத்தின் தொலைநோக்கை அடைந்துகொள்வதற்காக ஆற்றல் மிகுந்த முறையில் நட்புறவு, பரஸ்பரம் நன்மை பயக்கும் மற்றும் வலையமைப்புசார் கட்டமைப்புகளின் ஊடாக மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினது பல்வகை இயலாற்றல், திறமைகள், வளங்கள் மற்றும் திறன்களை அணிதிரட்டுதல்***

## 4. குறிக்கோள்கள்

4.1 சங்கத்தின் குறிக்கோள்களாவன:
- அ. பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் மற்றும் கல்லூரியின் மீது பழைய மாணவர்கள் கொண்டிருக்கக்கூடிய நட்புறவை மேம்படுத்துதல்
- ஆ. கல்லூரியில் தற்போது கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கிடையே கல்லூரி மீதான பற்றை ஊட்டுவதற்கும், அதனை வளர்ப்பதற்குமான முன்னெடுப்புகளை மேற்கொள்ளல்

4.2 கல்வியின் தரம் மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளின் தரம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு கல்லூரி மாணவர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகத்திற்கு உதவிபுரிதல்

4.3 நாட்டை நேசிக்கக்கூடிய, நம்பிக்கைக்குரிய மற்றும் பயனுள்ள பிரஜைகளை உருவாக்குவதற்குக் கல்லூரியுடன் துணைநிற்றல்

4.4 மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் இளம் தலைமுறையினர் சுய ஊக்கமுடையவர்களாகவும், தன்னிறைவு பெற்றவர்களாகவும் இருப்பதற்குரிய வழிகாட்டுதலையும், ஊக்குவிப்பையும் வழங்கி, ஆதரவளித்தல்

4.5 அதன் உறுப்பினர்கள் மற்றும் அதனுடன் இணைந்த பிற சங்கங்களுக்கு இடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் சார்ந்த பிணைப்புகளை ஏற்படுத்தி, அதனைப் பாதுகாத்தல்

4.6 கல்லூரியில் வரவேற்கத்தக்க ஒரு முகாமைத்துவ மற்றும் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதில் செயலூக்கத்துடன் கலந்துகொள்ளல் மற்றும்/ அல்லது அதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளல்

4.7 பாடவிதான மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு உட்கட்டமைப்புகள் மற்றும் ஏனைய தொடர்புடைய வளங்களை விருத்தி செய்வதற்குத் தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் அதற்காக ஈடுபடுதல்

4.8 இத்தால் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாடுகளை நடத்திச் செல்வதில் கல்லூரிக்கு நிதியளிப்பதற்காக, ஆரோக்கியமான ஒரு நிதி உட்பாய்ச்சலைப் பேணுவதற்கு ஒரு

அறக்கட்டளை நிதியத்தை உருவாக்குதல்

4.9 ப.மா.ச. - ஸா.க.மாவின் செயற்பாடுகளுக்கு உதவிபுரிவதற்கு அல்லது ஈடுபடுவதற்கு ஏனைய கல்லூரிகள் மற்றும் சங்கங்களுடன் ஆரோக்கியமான ஒரு உறவைப் பேணுதல் மற்றும் அதனை ஊக்குவித்தல்

## 5. சங்கத்தின் உறுப்புரிமை

5.1 'உறுப்புரிமைப் பதிவேட்டில்' தற்போது இடம்பெறும் பெயர்கள், சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

5.2 'உறுப்பினர்' எனும் சொல் 'சாதாரண', 'ஆயுட்கால' மற்றும் 'கௌரவ' உறுப்பினர்களைக் குறித்து நிற்கும்.

5.3 'சாதாரண', 'ஆயுட்கால' மற்றும் 'கௌரவ' உறுப்பினர்களின் பெயர்களை வெவ்வேறு பத்திகளில் 'உறுப்புரிமைப் பதிவேடு' கொண்டிருக்கும்.

5.4 சாதாரண உறுப்புரிமை மற்றும் உறுப்புரிமை சேர்க்கைக்கான தகைமை:

அ. ஒரு நாள் அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் மாவனல்லை ஸாஹிரா கல்லூரியில் மாணவராக இருந்த அனைவரும் பழைய மாணவர்களே.

ஆ. உறுப்புரிமைப் பதிவுக்காக விதித்துரைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி பொதுச் செயலாளரிடம் கையளித்து, நிறைவேற்றுக் குழுவினால் (பிரிவு 8இல் விளக்கியுரைக்கப்பட்டுள்ளது) அத்தகைய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உறுப்புரிமைப் பதிவுக்கான கட்டணத்தை செலுத்திய, மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களும்.

இ. 'சாதாரண உறுப்புரிமைக்கான' அத்தகைய விண்ணப்பம் பிரேரிக்கப்பட்டு, சங்கத்தின் இரண்டு உறுப்பினர்களால் ஆமோதிக்கப்பட வேண்டும்.

ஈ. மேற்குறித்த நிபந்தனைகள் மற்றும் அத்தகைய சேர்க்கையின் கீழ், உறுப்பினர் பதிவேட்டில் குறித்த உறுப்பினரின் பெயரைப் பொதுச் செயலாளர் சேர்க்க வேண்டும் என்பதுடன், குறித்த சேர்க்கை நடந்து 10 நாட்களுக்குள் அந்த உறுப்பினருக்கு அது குறித்து அறிவிக்கப்படல் வேண்டும்.

5.5 'கௌரவ' உறுப்புரிமைக்கான தகைமை

அ. 'சாதாரண' உறுப்பினர்களுக்கு மத்தியில் கல்லூரி மற்றும் சங்கத்திற்குக் கீர்த்தி வாய்ந்த மற்றும்/ அல்லது தலைசிறந்த சேவைகளை ஆற்றியுள்ள உறுப்பினர்கள் 'கௌரவ உறுப்புரிமைக்கு' தகுதி பெற்றவர்கள் ஆவர்.

ஆ. மேலுள்ள விளக்கவுரையில் (5.5. அ) 'கௌரவ உறுப்புரிமை விண்ணப்பம்' என்னும் வழிகாட்டுதலில் குறித்துரைக்கப்பட்டுள்ள அடிப்படை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் யாரேனும் ஒரு 'சாதாரண உறுப்பினர்', 'கௌரவ உறுப்புரிமைக்காக' விண்ணப்பிக்கலாம்.

இ. நிறைவேற்றுக் குழுவானது 'கௌரவ உறுப்புரிமைக்கான' பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்து, அதனை வழங்குவதா இல்லையா என்கின்ற தீர்மானத்தை மேற்கொள்ளும்.

ஈ. நிறைவேற்றுக் குழு மேற்கொள்ளும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த பொதுக் கூட்டத்தில் கௌரவ உறுப்பினர்களுக்கான உறுப்புரிமைப் பதக்கங்கள் வழங்கப்படும்.

5.6 உறுப்புரிமைக் கட்டணம்

அ. 'சாதாரண உறுப்புரிமைக்கான' உறுப்புரிமைப் பதிவுக் கட்டணம் (உறுப்புரிமைக்கான சேர்க்கையின் போது செலுத்த முடியும்) 800.00 இலங்கை ரூபாய்கள் (எண்ணூறு ரூபாய் மட்டுமே) என்பதுடன், இக்கட்டணமானது அவ்வப்போது திருத்தங்களுக்கு உட்பட்டது.

ஆ. ‘சாதாரண உறுப்புரிமைக்காக’ ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தக்கூடியதாகவுள்ள வருடாந்த சந்தாக் கட்டணம் 2,400.00 இலங்கை ரூபாய்களாகும் (இரண்டாயிரத்து நானூறு ரூபாய் மட்டுமே) என்பதுடன், இக்கட்டணமானது அவ்வப்போது திருத்தங்களுக்கு உட்பட்டது.

இ. இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக வருடாந்த சந்தாக் கட்டணத்தை செலுத்தத் தவறும் உறுப்பினர்கள், தமது சகல உறுப்புரிமைச் சலுகைகளையும் இழந்தவர்களாகக் கருதப்படுவர்.

ஈ. நிர்வாகப் பொறுப்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் ஒன்றில் உறுப்பினர் ஒருவர் வாக்களிப்பதற்கு, வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு முன்னர் அவர் தன்னுடைய நிலுவையைச் செலுத்தியிருக்க வேண்டும்.

உ. உயிர்ப்புடன் “செயற்படும்” உறுப்பினராக இருப்பதனூடாக வாழ்நாள் உறுப்புரிமைக்காக விண்ணப்பிப்பதன் மூலம், வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ‘வாழ்நாள் உறுப்புரிமை’ வழங்கப்படும் என்பதுடன், அதற்கான ஒரு தடவைக் கட்டணமாக 30,000 இலங்கை ரூபாய்களை (முப்பதாயிரம் ரூபாய் மட்டுமே) செலுத்த வேண்டும்; இக்கட்டணமானது அவ்வப்போது திருத்தங்களுக்கு உட்பட்டது.

ஊ. வாழ்நாள் உறுப்புரிமை வழங்கப்படும் எண்ணிக்கையானது சூழ்நிலையைப் பொறுத்து வேறுபடும் என்பதுடன், பரிந்துரையின் பேரிலும், வாழ்நாள் உறுப்புரிமைக்கான கட்டணத்தை செலுத்துவதனூடாகவும் அது வழங்கப்படலாம்.

எ. மேற்குறித்த பதிவு, சந்தா மற்றும் ஒரு தடவை அறவிடப்படும் கட்டணம் ஆகியன, காலத்துக்குக் காலம் வருடாந்தப் பொதுக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைவாக மாற்றங்களுக்கு உட்பட்டனவாகும்.

ஏ. உறுப்புரிமைப் பதிவு மற்றும் வருடாந்த சந்தாக் கட்டணங்கள் மாற்றப்படவோ அல்லது மீளப் பெறப்படவோ முடியாது.

5.7 உறுப்புரிமையை இரத்துச் செய்தல் (புதிதாக சேர்க்கப்பட்டது)

அ. சாதாரண உறுப்பினர் ஒருவர் நிலுவையில் இருக்கக்கூடிய தன்னுடைய வருடாந்த சந்தாக் கட்டணத்தை ஒவ்வொரு வருடமும் செலுத்தத் தவறினால் அவருடைய உறுப்புரிமை இரத்துச் செய்யப்படும்.

ஆ. கல்லூரிக்கு அல்லது கல்லூரியின் நற்பெயருக்கு வெறுக்கத்தக்க வகையில் பாதகம்/ இரண்டகம் விளைவிக்கும் ஒரு காரியத்தை சாதாரண உறுப்பினர் ஒருவர் செய்துவிட்டார் எனின், அல்லது அவ்வாறு செய்துவிட்டதாக முறைப்பாடு வருமிடத்து, அவருடைய உறுப்புரிமையை இரத்துச் செய்யப்படுவதற்கு/ முடிவுறுத்தப்படுவதற்கு முன்பதாக அத்தகைய உறுப்பினர் ஒழுக்காற்று விசாரணை ஒன்றுக்கு உட்படுத்தப்படுவார். தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயலாளரினால் பிரேரிக்கப்படும் நிறைவேற்றுக் குழுவின் ஏனைய இரண்டு சாதாரண உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு குழுவிடம் ஒழுக்காற்று விசாரணைக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, நியாயமான ஒரு விசாரணை நடத்தப்பட்டாலொழிய, ‘சாதாரண’ அல்லது ‘வாழ்நாள்’ உறுப்பினர் ஒருவரின் உறுப்புரிமை இரத்துச் செய்யப்படவோ அல்லது முடிவுறுத்தப்படவோ மாட்டாது என்பதுடன், ஒழுக்காற்று விசாரணைக்கான பொறுப்பு ஒப்படைக்கப்படும் 5 பேர் கொண்ட குழுவில் 3 பேர் குறித்த உறுப்பினரின் உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கு ஏக மனதுடன் இணக்கம் தெரிவிக்க வேண்டும். அத்தகைய முடிவுறுத்தல் ஏதேனும் இருப்பின், செயலாளர் அறிக்கையின் முன்மொழிவு மற்றும் ஆமோதித்தலுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் போதும் செயலாளரினால் அத்தகைய முடிவுறுத்தல் குறித்து அறிவிக்கப்பட்டு, அது ஆமோதிக்கப்பட வேண்டும்.

இ. கௌரவ உறுப்பினர் ஒருவரின் உறுப்புரிமையானது, அவருடைய பதவி விலகல் காரணமாகவோ அல்லது குறைந்தபட்சம் 5 (ஐந்து) வருட காலத்திற்கு ப.மா.ச. -

ஸா.க.மா.வின் எவ்வித விவகாரங்களுக்கும் பங்குகொள்ளாது இருந்ததற்கமைவாகவோ நிறைவேற்றுக் குழு தீர்மானம் மேற்கொள்ளுமிடத்து, அத்தகைய கௌரவ உறுப்பினருடைய உறுப்புரிமை இரத்துச் செய்யப்படும். 5.7.இ பிரிவில் குறித்துரைத்துள்ள அதே நடவடிக்கை முறை ஏதேனும் முடிவுறுத்தலுக்காக இவ்விடயத்திலும் பின்பற்றப்படும் என்பதுடன், அத்தகைய வாழ்நாள் உறுப்பினர்களை நீக்குவதற்கு முன்பதாக இன்னும் முறையாக மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவர்.

ஈ. உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்ட, முடிவுறுத்தப்பட்ட அல்லது உறுப்புரிமையை இராஜனாமா செய்த யாரேனும் உறுப்பினர் ஒருவர், மீண்டும் சாதாரண அல்லது வாழ்நாள் உறுப்பினராக அவருடைய பழைய பதிவின் கீழ் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவதையோ மற்றும்/ அல்லது புதிதாகப் பதிவேட்டில் பதிந்து கொள்வதையோ இத்தால் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள எதுவும் தடுக்காது. ஆயின், எவ்வாறாயினும், 5.5ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, நிறைவேற்றுக் குழுவைத் திருப்திப்படுத்தும் வரை எந்தவொரு ஆயுட்கால உறுப்பினரும் தனது முந்தைய வாழ்நாள் உறுப்புரிமையில் மீண்டும் ஒருமுறை ஆயுட்கால உறுப்பினராக இணைத்துக்கொள்ளப்படுவதற்கு உடனடியாகத் தகுதிபெற மாட்டார்.

## 6. நிர்வாகப் பொறுப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்

i. பின்வரும் ஆறு (6) நிர்வாகப் பொறுப்பாளர்கள் (“அ) முதல் உ)” வரையான எழுத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ளது போல) மற்றும் பதினொரு (11) நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களை உள்ளடக்கிய, மொத்தமாகப் பதினேழு (17) நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுக் குழுவினால் சங்கத்தின் அனைத்து விவகாரங்களும் நிர்வகிக்கப்படும் என்பதுடன், அதன் உறுப்பினர்களாவன:
   - அ) கௌரவத் தலைவர் - இது பதவிவழிசார் நியமனம் என்பதுடன், கல்லூரியின் அதிபரே பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகப் பதவி வகிப்பார்.
   - ஆ) கௌரவ உப அதிபர்
   - இ) கௌரவ பொதுச் செயலாளர்
   - ஈ) கௌரவ பொருளாளர்
   - உ) கௌரவ துணைச் செயலாளர்
   - ஊ) கௌரவ துணைப் பொருளாளர்
   - எ) பதினொரு (11) கௌரவ நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்

ii. ஒவ்வொரு நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் இரண்டு (2) வருடங்களுக்கு மேற்படாத ஒரு பதவிக் காலத்திற்கு தெரிவு செய்யப்படுவார் என்பதுடன், அத்தகைய தெரிவின் பின்னர் மீண்டும் ஒருமுறை மற்றுமொரு வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட முடியும்.

iii. நிர்வாகப் பொறுப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்ட பின்னர், ப.மா.ச. - ஸா.க.மா.வின் தலைவராக அதிபர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக நியமனக் கடிதத்தை வழங்கி வைப்பார். அதேபோல, பதவிக் காலத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ததுடன், குறித்த உறுப்பினர் ஆற்றிய தன்னார்வத் தொண்டை அங்கீகரிக்கும் விதமாக அதிபர் அவர்கள் பாராட்டுக் கடிதம் ஒன்றையும் வழங்கி வைப்பார்.

iv. தொடர்ச்சியாக மூன்று (3) நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களுக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி சமூகமளிக்காத நிறைவேற்றுக் குழு உறுப்பினர் எவரும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி நீக்கம் செய்யப்படுவார். மேலும், அவர் பதவி வகிக்கத் தகுதியற்றவராகக் கருதப்படுவார் மற்றும்/ அல்லது புதிய நிறைவேற்றுக்

குழுவின் அடுத்த உடனடிப் பதவிக் காலத்திற்கு (2 வருடங்கள்) நிறைவேற்றுக் குழுவில் பதவி வகிப்பதற்குப் பரிந்துரைக்கப்பட மாட்டார்.

v. யாரேனும் உறுப்பினர் ஒருவரின் உறுப்புரிமை முடிவுறுத்தப்பட்டதன் விளைவாக மற்றும்/ அல்லது இராஜனாமா செய்ததன் விளைவாக, ஏதேனும் நிறைவேற்றுக் குழு அல்லது குழு உறுப்பினர் பதவி வெற்றிடமாகுமிடத்து, இத்தால் குறித்துரைக்கப்பட்டுள்ளபடி அத்தகைய முடிவுறுத்தல் மற்றும்/ அல்லது பதவி விலகல் இடம்பெற்று 15 நாட்களுக்குள் நிறைவேற்று குழுவானது ஒரு உத்தியோகபூர்வ கூட்டத்தைக் கூட்டி, புதிய ஒரு உறுப்பினரை மற்றும்/ அல்லது ஏற்கனவே நிறைவேற்றுக் குழுவில் பதவி வகிக்கும் உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்வதனூடாக அவ்வெற்றிடத்தை நிரப்ப முடியும்.

vi. நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் பங்கேற்புடன் ஒவ்வொரு நிறைவேற்றுக் குழுவும் ஒரு 'பிரேரணைக் குழுவை' உருவாக்கும் என்பதுடன், அப்பிரேரணைக் குழுவானது நிர்வாகப் பொறுப்பாளர்களின் தெரிவு தொடர்பான விடயங்களை நிர்வகிக்கும்.

vii. நிறைவேற்றுக் குழுவிற்குத் தெரிவு செய்யப்படுவதற்காக தமது வேட்பு மனுக்களைத் தாமாகவோ அல்லது வேறு எவரேனும் உறுப்பினர் மூலமாகவோ தாக்கல் செய்ய முடியாது என்பதுடன், பின்வரும் தகுதி வரம்புகளைப் பூர்த்தி செய்யாத வரை, எந்த உறுப்பினரும் வேட்பு மனு தாக்கல் செய்யவோ அல்லது நிறைவேற்றுக் குழுவுக்குத் தெரிவு செய்யப்படவோ முடியாது:

அ) மாவனல்லை ஸாஹிரா கல்லூரியில் 2 வருடக் கற்கை பூர்த்தி செய்யாத எந்தவொரு உறுப்பினரும் வேட்புமனு தாக்கல் செய்வதற்கோ அல்லது நிர்வாகப் பொறுப்பாளராக ஏதேனும் பதவிக்குத் தெரிவு செய்யப்படவோ தகுதிபெற மாட்டார்;

ஆ) பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினராக அல்லது தெரிவு செய்யப்பட்டு பதவி வகிக்கக்கூடிய உயிர்ப்புடன் செயற்படும் அரசியல்வாதியாக இருக்கும் ஒருவர் வேட்புமனு தாக்கல் செய்வதற்கோ அல்லது நிர்வாகப் பொறுப்பாளராக ஏதேனும் பதவிக்குத் தெரிவு செய்யப்படவோ தகுதிபெற மாட்டார்;

இ) பட்டதாரியாகவோ அல்லது அங்கீகாரம் பெற்ற தொழில்முறைத் தகைமையோ இல்லாத எவரும் வேட்புமனு தாக்கல் செய்வதற்கோ அல்லது நிர்வாகப் பொறுப்பாளராக ஏதேனும் பதவிக்குத் தெரிவு செய்யப்படவோ தகுதிபெற மாட்டார்;

ஈ) ஆயின், எவ்வாறாயினும், தகுதி வரம்புக்கான ஏனைய எல்லா நிபந்தனைகளையும் (6 ii, 6 iv, 6 vii a to j) பூர்த்தி செய்த நிலையில் உறுப்பினர் ஒருவர் சமூகத்தில் கீர்த்தி வாய்ந்த நற்பெயர் பெற்றவராக இருப்பின் மற்றும்/ அல்லது ஸாஹிரா கல்லூரிக்குத் தனிச்சிறப்பு மிக்கதாக சேவையாற்றி இருப்பின், அத்தகைய உறுப்பினர் பிரேரிக்கப்பட்டுள்ள பதவிக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் நிறைவேற்றுக் குழுவிலுள்ள பொது உறுப்புரிமை மூலமாக அத்தகைய பிரேரணை உறுதிப்படுத்தப்படுமிடத்து அவ்வுறுப்பினர் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு மற்றும்/ அல்லது நிர்வாகப் பொறுப்பாளராகத் தெரிவு செய்யப்படுதற்குத் தகுதியுடையவராகலாம்.

உ) ப.மா.ச. - ஸா.க.மா.வில் குறைந்தபட்சம் 6 வருடங்களுக்கு பதிவு செய்யப்பட்ட உறுப்பினராக சேவையாற்றாத எவரும் வேட்புமனு தாக்கல் செய்வதற்கோ அல்லது நிர்வாகப் பொறுப்பாளராகத் தெரிவு செய்யப்படுவதற்கோ தகுதி பெற மாட்டார்; மற்றும்

ஊ) குறித்துரைக்கப்பட்டுள்ள பிரேரணை அல்லது தேர்தலுக்கு முன்னதாக மேற்குறித்த 6 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்

உறுப்புரிமை ஒன்றைக் கொண்டிராத மற்றும்/ அல்லது பதிவு செய்யப்பட்ட உறுப்பினராக இல்லாத எவரும் வேட்டுமனு தாக்கல் செய்வதற்கோ அல்லது நிர்வாகப் பொறுப்பாளராகப் பதவி வகிப்பதற்கோ தகுதிபெற மாட்டார்;

எ) புகழ் பூத்த நிறுவனம் ஒன்றில் கணக்காளராகப் பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்கும் தகுதி வாய்ந்த கணக்காளர் அல்லது பகுதியளவு தகுதி வாய்ந்த கணக்காளர் அல்லாத எவரும் பொருளாளர் மற்றும்/ அல்லது துணைப் பொருளாளர் பதவிக்கு வேட்புமனு தாக்கல் செய்வதற்கோ அல்லது அப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கோ தகுதிபெற மாட்டார்;

ஏ) மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் மாணவராக இருந்திராத மற்றும் கடந்த 5 வருடங்களில் 2 வருடங்களுக்கும் குறையாத கால அளவு ப.மா.ச. - ஸா.க.மா.வில் இருந்திராத எவரும் வேட்புமனு தாக்கல் செய்வதற்கோ அல்லது நிறைவேற்றுக் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கோ தகுதிபெற மாட்டார்;

ஐ) மேற்குறித்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் எந்தவொரு உறுப்பினரும், வேறெந்த தகுதிச் சோதனைகளுக்கும் உட்படுத்தப்படாமல், வேட்புமனு தாக்கல் செய்வதற்கு மற்றும்/ அல்லது நிறைவேற்றுக் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு உடனடித் தகுதிபெற்றவராகக் கருதப்படுவார்; ஆயின், எவ்வாறாயினும், பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தேர்தல் நேரத்தின் போது அவசியமான வரம்புகளைப் பூர்த்தி செய்யவில்லை என மற்றும்/ அல்லது இப்பதவிக்குத் தகுதியற்றவர் என பின்னர் கண்டறியப்பட்டால், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அத்தகைய உறுப்பினருடைய பதவி முடிவுறுத்தப்பட்டு 6(iv) பிரிவில் குறித்துரைத்துள்ளபடி அப்பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேவையான முன்னெடுப்புகளை நிறைவேற்றுக் குழு மேற்கொள்ள வேண்டும்;

ஒ) ஏனைய உறுப்பினர்களால் பிரேரிக்கப்படும் எவரேனும் உறுப்பினர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு பிரேரிக்கப்படத் தகுதிபெற மாட்டார், மற்றும் அவ்வாறு அவர் பிரேரிக்கப்பட்டால் அவருடைய பிரேரணைப் பத்திரம் செல்லுபடியற்றதாக ஆகிவிடும்.

## 7. வருடாந்தப் பொதுக் கூட்டம்

i. ஒவ்வொரு வருடமும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் வருடாந்தப் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவது பதவி வகிக்கும் நிறைவேற்றுக் குழுவின் பொறுப்பாகும்.

ii. குறித்த கூட்டத்தில் சமூகமளித்திருக்கும் பொது உறுப்பினர்களுக்கு மத்தியிலிருந்து இரண்டாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய நிறைவேற்றுக் குழு ஒன்றைத் தெரிவு செய்வதற்கு பதவி வகிக்கும் நிறைவேற்றுக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்

iii. நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்படுமிடத்து, வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குக் குறைந்தபட்சம் (14) நாட்கள் முன்பதாகப் பொதுச் செயலாளர் அனைத்து உறுப்பினர்களுக்கும் அது குறித்துத் தெரியப்படுத்துவார்.

iv. வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டிய ஏதேனும் பிரேரணை, தீர்மானம் அல்லது ஏனைய விடயங்கள்/ விவகாரங்கள் இருப்பின், குறித்த கூட்டத்திற்குக் குறைந்தபட்சம் ஏழு (07) நாட்கள் முன்பதாக அது தொடர்பாக பொதுச் செயலாளரிடம் எழுத்து வடிவில் கையளிக்கப்பட வேண்டும். அனைத்துப் பிரேரணைகள் மற்றும்/ அல்லது கலந்தாலோசிக்கப்படவுள்ள அனைத்து விடயங்கள் மற்றும்/ அல்லது வேறு ஏதேனும்

விவகாரங்கள் அந்தந்த விடயங்களுக்கான முன்னுரிமை அடிப்படையில் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படுவதற்காக நிறைவேற்றுக் குழுவினால் சமர்ப்பிக்கப்படும்.

v. வருடாந்தப் பொதுக் கூட்டத்தை ஆரம்பிக்கலாம் எனக் கருதக்கூடிய வகையில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐம்பது (50) என்பதுடன், அவர்கள் குறித்த கூட்டத்திற்கு சமூகமளிப்பதற்கும், அக்கூட்டத்தில் வாக்களிப்பதற்கும் தகுதிபெற்றவர்களாக இருக்க வேண்டும்.

vi. முந்தைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் அறிக்கைகளைப் பொதுச் செயலாளரானவர் பொது நிர்வாகத்திடம் சமர்ப்பித்து, அதனை சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

vii. நிறைவேற்றுக் குழுவினால் சான்றுப்படுத்தப்பட்டபடி, இறுதியாக நடந்தேறிய வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் ஆரம்பத்திலிருந்து துவங்கி, முந்தைய வருடம் ப.மா.ச. - ஸா.க.மா. வினால் பேசப்பட்ட அனைத்து முக்கியமான விடயங்கள், எட்டப்பட்ட அனைத்து முக்கியமான தீர்மானங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பணிகள் மற்றும் காரியங்களை உள்ளடக்கிய வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் வருடாந்த அறிக்கையைப் பொதுச் செயலாளர் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அறிக்கையில், செயலாற்றிய பழைய மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் முந்தைய 12 மாதங்களில் புதிதாக இணைந்துகொண்ட உறுப்பினர்களின் பெயர்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். குறித்துரைக்கப்பட்ட அறிக்கையானது முன்மொழியப்பட்டு, முறையாக இருந்ததாக ஆமோதிக்கப்படும். திருத்தங்களுக்கான ஏதேனும் முன்மொழிவின் போது, அறிக்கையானது முன்மொழியப்பட்டு, அத்தகைய திருத்தங்களுக்கு முறையாக அது உட்படுத்தப்பட்டதாக இருக்கும் என ஆமோதிக்கப்படுவதுடன், அத்தகைய திருத்தங்கள் உடனடியாகத் தொடரக்கூடிய அடுத்த ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உட்சேர்க்கப்பட்டிருக்கும்.

viii. பொது உறுப்பினர்கள் மூலமாக முந்தைய கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஊடாக முறையே கணக்காய்வு செய்யப்பட்ட, முந்தைய வருடத்திற்கான இருப்புநிலைக் குறிப்பு உள்ளடங்கிய விரிவான கணக்கறிக்கையானது, நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு, வருடாந்த பொதுக் கூட்டத்தில் சான்றுப்படுத்தப்படுவதற்காகப் பொருளாளரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ix. அனைத்து வகையான பிரேரணைகள், கலந்தாலோசிக்கப்பட வேண்டிய விடயங்கள், மற்றும்/ அல்லது வேறு ஏதேனும் விவகாரங்கள், அதே வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஒரு எளிய பெரும்பான்மை மூலமாகத் தீர்வு காணப்பட்டு, சான்றுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அத்தகைய தீர்மானம் அல்லது சான்றுப்படுத்தலுக்குப் பின்னர் அது அங்கீகரிக்கப்பட்டதாகவும், செல்லுபடியானதாகவும் கருதப்படும்.

## 8. விசேட பொதுக் கூட்டம்

i. ஏதேனும் விசேட விவகாரங்கள் தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்வதற்கு மற்றும்/ அல்லது; சங்கத்தின் ஐம்பது (50) உறுப்பினர்களுக்குக் குறையாமல் கையொப்பமிட்டு பொதுச் செயலாளருக்கு எழுத்து மூலமாகக் கோரிக்கை வைக்கும் பட்சத்தில், தலைவர் அல்லது செயலாளர் அத்தகைய கோரிக்கை மீது உடனடியாக செயற்பட்டு, நிறைவேற்றுக் குழுவின் *அனுமதியுடன்* அக்கூட்டத்தைக் கூட்டுவார்கள்.

ii. எதற்காகக் கூட்டம் கூட்டப்பட வேண்டுமோ அதற்கான காரணம் கோரிக்கையின் போது குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், குறித்துரைக்கப்படும் விவகாரம் மட்டுமே அக்கூட்டத்தில் கலந்துரையாடப்படும்.

iii. உறுப்பினர்களால் அத்தகைய கோரிக்கை முன்வைக்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள், *நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு*, மேலதிக அல்லது விசேட பொதுக் கூட்டம் நடைபெறும்.

iv. அத்தகைய விசேட அல்லது மேலதிகப் பொதுக் கூட்டம் நடைபெறுவதற்கு ஏழு (07) நாட்கள் முன்பதாக எழுத்து மூலமாகப் பொதுச் செயலாளரினால் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படும்.

v. விசேட அல்லது மேலதிகப் பொதுக் கூட்டத்தை ஆரம்பிக்கலாம் எனக் கருதக்கூடிய வகையில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை எண்பது (80) என்பதுடன், அவர்கள் குறித்த கூட்டத்திற்கு சமூகமளிப்பதற்கும், அக்கூட்டத்தில் வாக்களிப்பதற்கும் தகுதிபெற்றவராக இருக்க வேண்டும்

## 9. தேர்தல் முறைமை

i. ப.மா.ச. - ஸா.க.மா.வின் தலைவர் பதவி தவிர்த்து ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான உறுப்பினர்கள் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நடத்தப்படும் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகத் தெரிவு செய்யப்படுவர்;

ii. நிர்வாகப் பொறுப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் தெரிவுக்கான வேட்பு மனுக்கள் 6 (V)ஆம் உறுப்புரையில் குறித்துரைத்துள்ள தகுதி வரம்புகளுக்கு உட்பட்டுப் பின்வருமாறு அமையப்பெறும்:

அ) சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பாளராக நிறைவேற்றுக் குழுத் தேர்தலில் போட்டியிட விரும்பும் யாரேனும் உறுப்பினர் ஒருவர், வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு சரியாக ஏழு (7) நாட்கள் முன்பதாகப் பொதுச் செயலாளருக்கு அது குறித்து அறிவிக்க வேண்டும்.

ஆ) வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு வேட்புமனுக்களை சமர்ப்பிக்கும் போது நடப்பு ஆண்டுக்கான உறுப்புரிமைக் கட்டணம் உள்ளடங்களாக ஏனைய அனைத்து நிலுவைகளையும் செலுத்தியுள்ள உறுப்பினர்கள் மாத்திரமே வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வேட்புமனு தாக்கல் செய்யும்போது அதற்காகப் பிரேரிக்கப்படத் தகுதியானவராகக் கருதப்படுவர்.

இ) பொதுச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் அல்லது பூர்த்தி செய்ய வைத்தல் வேண்டும் என்பதுடன், அவ்விண்ணப்பப் படிவமானது முன்மொழிபவர் மற்றும் ஆமோதிப்பவரின் பெயர்கள் மற்றும் கையொப்பங்களுடன் சேர்த்து, அவ்வேட்புமனுவைத் தாக்கல் செய்ய விரும்பும் அத்தகைய உறுப்பினரின் எழுத்துமூல சம்மதத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

ஈ) இத்தால் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு முரணாக, ஒரே தேர்தலில் பொதுச் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகிய இரண்டு பதவிகளுக்கும் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு எந்த உறுப்பினரும் அனுமதிக்கப்பட மாட்டார். அவ்வாறு வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டால், அத்தகைய இரண்டு வேட்புமனுக்களும் செல்லுபடியற்றதாகக் கருதப்படும்.

உ) மேற்குறித்த பதவிகளுக்கு வேட்புமனுக்களைப் பெறுவதன் மீது, இத்தால் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு வேட்பாளரினதும் பொருத்தப்பாடு மற்றும் தகைமை என்பன நிறைவேற்றுக் குழுவினால் மதிப்பிடப்படும். மேலும், வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு 3 நாட்கள் முன்பதாக வேட்பாளரின் பெயர் பட்டியல்கள் அதற்கான பரிந்துரைகளுடன் தலைவரிடம் கையளிக்கப்படும்.

ஊ) இத்தால் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக முன்மொழியப்பட்டுள்ள யாரேனும் ஒருவர் தகுதியற்றவர் எனக் கருதப்படும் பட்சத்தில், அவரைத் தகுதி நீக்கம் அல்லது பதவி நீக்கம் செய்வதற்குத் தலைவருக்குப் பூரண அதிகாரம் உண்டு, மற்றும் அவ்வாறு தகுதி நீக்கம் அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களுடைய பெயர்கள், நிர்வாகப் பொறுப்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் ஆரம்பிப்பதற்கு முன்பதாக வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தகுதி நீக்கம் மற்றும் பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கான காரணத்தோடு அறிவிக்கப்படல் வேண்டும்.

எ) தலைவர் மூலமாகப் புதிய நிறைவேற்றுக் குழுவைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்

ஆரம்பிப்பதற்கு முன்பதாக, வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தகுதிபெறும் பிரேரணைகள் குறித்து அறிவிக்கப்படும்

iii. நிறைவேற்றுக் குழுவின் நிரந்தர உறுப்பினராகப் பதவி வகிக்கும் தலைவர், வருடாந்தப் பொதுக் கூட்டம் ஒன்றில் நிறைவேற்றுக் குழுவுக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் தேர்தலில் தலைமைதாங்கும் அதிகாரியாக செயற்படுவார்.

iv. ஒரு பதவிக்குத் தகுதியான, ஒன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் நிறைவேற்றுக் குழுவில் இருந்தால், இரண்டு வேட்பாளர்களும் ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு அவசியமான நடவடிக்கைகளைத் தலைவர் மேற்கொள்ள வேண்டும், அவ்வாறு ஒருமித்த கருத்தை எட்ட முடியவில்லையாயின், அப்பதவிக்கான இரகசிய வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்குத் தலைவர் அறிவிப்பு விடுப்பார்.

v. நடப்பு ஆண்டுக்கான உறுப்புரிமைக் கட்டணம் உள்ளடங்களாக, ஏதேனும் நிலுவைகள் இருப்பின், அவை அனைத்தையும் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடப்பதற்கு ஒரு வாரம் முன்பதாக செலுத்தியுள்ள உறுப்பினர்கள் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

vi. மேற்குறித்துள்ள நிபந்தனைகளின் கீழ், தகுதிபெற்ற வேட்பாளர்களிடமிருந்து வருடாந்தப் பொதுக் கூட்டம் ஒன்றில் வேட்புமனுக்கள் கிடைக்கப்பெறாத போது, நிறைவேற்றுக் குழுவின் கலந்தாலோசனையுடன், நிர்வாகப் பொறுப்பாளர்களை அல்லது நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு ஏனைய உறுப்பினர்களின் (இத்தால் குறித்துரைக்கப்பட்டுள்ள தகுதி வரம்புகளுக்கு உட்பட்டு) பெயர்களை முன்மொழிந்து, அவற்றை ஆமோதிக்கும்படி வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு வருகைதந்துள்ள உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்ளப்படும்.

vii. இந்த யாப்பு அமுலுக்கு வந்ததன் பின்னர், நிறைவேற்றுக் குழுவில் தொடர்ச்சியாக 2 தடவைகள் பதவி வகித்த எவரேனும் ஒரு உறுப்பினர், அடுத்து வரும் உடனடிப் பதவிக் காலத்திற்குப் பிரேரிக்கப்படுவதற்குத் தகுதிபெற மாட்டார். மற்றும், குறைந்தபட்சம் ஒரு (1) வருட காலம் நிறைவேற்றுக் குழுவில் அங்கம் வகிக்கமால் ஓய்வில் இருந்துவிட்டு, அதன் பின்னரே மீண்டும் பிரேரிக்கப்படவோ அல்லது தெரிவுசெய்யப்படவோ முடியும்.

viii. ப.மா.ச. - ஸா.க.மா.வின் தங்குதடையற்ற இயக்கத்திற்காக விலகிச் செல்லும் நிறைவேற்றுக் குழுவின் மூலமாகப் பதவியிலுள்ள நிறைவேற்றுக் குழுவிலிருந்து ஒரு (1) உறுப்பினர் பிரேரிக்கப்படுவார், மற்றும் வருடாந்தப் பொதுக் கூட்டத்திலுள்ள பொது உறுப்புரிமை மூலமாக அத்தகைய பிரேரணைகள் சான்றுப்படுத்தப்படும்.

ix. ஏதேனும் பதவிக்காகப் பிரேரிக்கப்பட்ட வேட்பாளர் ஒருவர் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு சமூகமளிக்கத் தவறினால் மற்றும் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் இறுதி வரை கலந்துகொள்ளத் தவறினால், அவர் சார்பாக செயற்படக்கூடிய அதிகாரத்தை மற்றொரு உறுப்பினருக்கு வழங்கினாலேயே அன்றி, அவர் சமூகமளிக்காததன் காரணமாக அவருடைய பிரேரணையைத் திரும்பப் பெற்றவராகக் கருதப்படுவார்.

## 10. நிறைவேற்றுக் குழுவின் வல்லமைகள், அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் கடமைகள்

i. அனைத்து விதமான கலந்துரையாடல்கள், தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் மற்றும் ப.மா.ச. - ஸா.க.மா.வின் இயக்கத்திற்கு அத்தியவசியமானது எனக் கருதக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளடங்களாக, ப.மா.ச. - ஸா.க.மா.வுக்கு உரித்தான அனைத்துத் தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கான முழு அதிகாரமும் நிறைவேற்றுக் குழுவுக்கு உரித்துடையதாக இருக்கும்.

ii. நிறைவேற்றுக் குழுவிலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் தலா ஒரு வாக்கு வீதம்

அளிப்பதற்கான வல்லமை இருக்கும் என்பதுடன், அனைத்து விதமான பிரேரணைகள், தீர்மானங்கள், அல்லது ஏனைய விடயங்கள்/ விவகாரங்கள் (செயற்றிட்டங்கள், செயற்பாடுகள், புதிய உறுப்புரிமைகளை அங்கீகரித்தல் அல்லது நிராகரித்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய வருடாந்த பாதீடுகள் மற்றும் செலவுகள் உள்ளடங்களாக) ஆகியன நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள் கூட்டப்படுவதற்கான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒரு எளிய பெரும்பான்மை மூலமாக அங்கீகரிக்கப்படும்.

iii. ஏதேனும் ஒரு கூட்டத்தில் ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாகத் தீர்வொன்றை எட்ட இயலாத சூழ்நிலை ஏற்பட்டால், வாக்கைத் தீர்மானிப்பதற்காகத் தலைவருக்கு அல்லது தற்காலிகத் தலைவருக்கு அறுதிவாக்கைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

iv. நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஒருவருக்குப் பதிலாக உரிமைபெற்ற பிரதிநிதி ஒருவரையோ அல்லது பதிலாள் வாக்குகளையோ பயன்படுத்த அனுமதியளிக்கப்பட மாட்டாது.

v. இந்த யாப்பிற்கு அமைவாக நிறைவேற்றுக் குழுவினூடாக நிறைவேற்றப்படும் அனைத்து விதமான பிரேரணைகள், தீர்மானங்கள் அல்லது ஏனைய விடயங்கள்/ விவகாரங்கள் ஆகியன, திகதி குறைத்துரைக்கப்படாத விடுத்து, அத்தகையதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தினத்திலிருந்து அமுலுக்கு வரும் என்பதாகக் கருதப்படும்.

vi. விசேட செயற்றிட்டங்கள் மற்றும் காலம் வரையறுக்கப்பட்ட பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மற்றும்/ அல்லது நடைமுறைப்படுத்துவதற்கு நிறைவேற்றுக் குழுவுக்கு அதன் நேரடிக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் 'உப குழுக்கள்' மற்றும் 'செயற்குழுக்கள்' ஆகியவற்றை அமைப்பதற்கான அதிகாரம் காணப்படும்; அத்தகைய உப குழுவில் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர் ஒருவர் தலைமைப் பொறுப்பை வகிப்பார். எனினும், அத்தகைய உப குழுக்கள் நிறைவேற்றுக் குழுவுக்குப் பதில் மற்றும்/ அல்லது பொறுப்புக்கூற வேண்டும்; அத்தகையதாக, நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் சங்கத்தின் பொது உறுப்பினர்களுக்கு பதில் மற்றும்/ அல்லது பொறுப்புக்கூற வேண்டும்.

vii. சங்கத்திற்கு அவப்பெயர் விளைவிக்கும் யாரேனும் உறுப்பினர் ஒருவரை, நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள் கூட்டப்படுவதற்கான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலமாக நீக்குவதற்கோ அல்லது அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கோ நிறைவேற்றுக் குழு பூரண வல்லமையைக் கொண்டிருக்கும்.

viii. இந்த யாப்பில் வெளிப்படையான ஏற்பாடுகளினூடாகக் குறித்துரைக்கப்படாத துணைச் சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள், மற்றும் முகாமைத்துவ செயல்முறைகளை ஆக்குவதற்கும், காலத்திற்குக் காலம் சங்கத்தின் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கான முழுமையான ஒரு முறைமையை உருவாக்குவதற்கும், நிறைவேற்றுக் குழுவுக்குப் பூரண வல்லமை காணப்படும். அத்தகைய துணைச் சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள், மற்றும் முகாமைத்துவச் செயல்முறைகள் மூலமாக இத்தால் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஏற்பாடுகளை வெளிப்படையாகவோ அந்தரங்கமாகவோ மாற்றியமைக்க, தடுக்க, அல்லது குறைமதிப்பீடு செய்ய முடியாது.

ix. தெரிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து நிர்வாகப் பொறுப்பாளர்களும், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களும், தமது பதவிக் காலம் முழுவதும் ரூபாய் ஆயிரத்துக் குறையாத (ரூபாய். 1,000) ஒரு தொகையை ஒவ்வொரு மாதமும் செலுத்துவது கட்டாயமாகும். எனினும், விதிவிலக்கான சூழ்நிலைகளின் போது, இந்த மாதாந்தத் தொகையைத் தள்ளுபடி செய்யும் பூரண அதிகாரம் நிறைவேற்றுக் குழுவுக்குக் காணப்படுகிறது.

## 11. நிர்வாகப் பொறுப்பாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்

i. பொதுச் செயலாளர்

அ) உரிய மற்றும் முறையான உறுப்பினர் பதிவேடு, நிறைவேற்றுக் குழுவின் அனைத்துக் கூட்டங்கள், அதேபோல சங்கத்தினது பொது மற்றும் விசேட கூட்டங்களினது அறிக்கைத் தொகுப்புகள் அடங்கிய புத்தகங்கள், மற்றும் சங்கத்தின் விவகாரங்கள் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் பேணுதல்.

ஆ) வருடாந்தப் பொதுக் கூட்டம், விசேடப் பொதுக் கூட்டம், மற்றும் நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள், மற்றும்/ அல்லது சங்கத்தின் விவகாரங்களுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விசேட கூட்டங்கள் ஆகியன உள்ளடங்களாக அனைத்துக் கூட்டங்களையும் கூட்டுதல்.

இ) துணைச் செயலாளர் மற்றும் அது போன்ற தகைமையுடைய ஏனைய குழு உறுப்பினர்களின் ஆதரவுடன், 'பழைய மாணவர் சங்கச் செயலகத்தைப்' பராமரிப்பது மற்றும்/ அல்லது அதனுடனான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

ஈ) நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களில் எட்டப்படும் தீர்மானங்கள், ஏனைய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுடன் முறையான ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடலுடன் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதிலும், உறுதிப்படுத்துவதிலும் உயிர்ப்பான ஒரு வகிபாகத்தை ஆற்றுதல்.

உ) ப.மா.ச. - ஸா.க.மா. சார்ந்த அனைத்துப் பதிவேடுகளையும் பேணுதல் மற்றும் அவருடைய பதவிக் காலம் முடிவுறும் வரை அல்லது நிறைவடையும் வரை அனைத்து ஆவணங்களையும் அவருடைய பொறுப்பில் வைத்திருத்தல்.

ஊ) நிறைவேற்றுக் குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு அமைவாக, நிகழ்வுகளின் போது ப.மா.ச. - ஸா.க.மா.வைப் பிரதிபலித்தல் மற்றும் ப.மா.ச. - ஸா.க.மா.வின் முகமாகச் செயற்படுதல்.

i. துணைத் தலைவர்

அ) 'தற்காலிகத் தலைவராகச்' செயற்படுதல் மற்றும் தலைவர் தற்காலிகமாக இல்லாத போது அவருடைய கடமைகளை முன்னெடுத்துச் செல்லல்.

ஆ) தலைவர் தற்காலிகமாக இல்லாத போது நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல்.

இ) முன்னணி உப குழுக்கள் மற்றும் ஏனைய பிரதிக் குழுக்கள் உள்ளடங்களாக, தலைவர் மற்றும் நிறைவேற்றுக் குழுவினால் நியமிக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்.

iii. பொருளாளர்

அ) கணக்கேடுகள், கோப்புகள், பற்றுச்சீட்டுகள், கொடுப்பனவு வவுச்சர்கள், வருமானம் மற்றும் செலவு தொடர்பான ஏனைய முக்கிய ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள், சங்கத்தின் நிதியங்கள் மற்றும் ஆதனங்கள் ஆகியவற்றை துணைப் பொருளாளர் மற்றும் 'பழைய மாணவர் சங்கச் செயலகத்தின்' தகைமையுடைய ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் பேணி வருதல் மற்றும்/ அல்லது பராமரித்தல்

ஆ) சங்கத்தின் நிதி நிலை குறித்து நிறைவேற்றுக் குழுவுக்கு மாதந்தோறும், தொடர்ச்சியாக மற்றும் தேவையேற்படும் போது அறிக்கை சமர்ப்பித்தல்.

இ) நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்துடன், சங்கத்தின் மிகை நிதிகளை அதற்குச் சிறந்த முறையில் பயனளிக்கும் வகையில் முதலிடுதல்/ வைப்பிலிடுதல்

ஈ) சங்கத்தின் ஏனைய உறுப்பினர்களிடமிருந்து மாதாந்த சந்தாக் கட்டணத்தை சேகரித்தல் மற்றும் அவர்களிடமிருந்து ஏனைய வருமானச் சேகரிப்புகளுக்காகக் கூட்டிணைவுடன் செயலாற்றுத்தல்.

உ) பொருட்பதிவேடு, தேவையான அனைத்து ஆவணங்கள், பதிவேடுகள் மற்றும் சங்கத்தின் சொத்துகள் மற்றும் ஆதனங்களின் நிலை குறித்த தகவல்களைப் பேணி வருதல்.

ஊ) அனைத்து நிதிப் பரிவர்த்தனைகள் பற்றியதுமான ஒரு பதிவேட்டைப் பேணுதல்.

எ) சங்கத்தின் மாதாந்த மற்றும் வருடாந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தல்.

ஏ) இரண்டு நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களுக்கு இடையே ரூபாய். 10,000 வரையான காசோலைக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் பெற்றிருத்தல்.

ஐ) 10,000 ரூபாவுக்கு அதிகமாக கொடுப்பனவுகளுக்கு நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்தை நாட வேண்டும்

ஒ) அதற்கேற்றாற்போல், பற்றுச்சீட்டுகள், காசோலைக் கொடுப்பனவுகள் மற்றும் குறிப்பேடு வவுச்சர்களைத் தயாரித்தல்.

ஓ) சங்கத்தின் கணக்காய்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வெளிவாரிக் கணக்காய்வாளருடன் ஒருங்கிணைவை ஏற்படுத்திக் கொள்ளல்

iv. நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்

அ) கூட்டங்கள் கூடுவதற்கான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கையை அது குறித்து நிற்கும்

ஆ) தம்மை நியமித்துள்ள சங்கத்தின் உறுப்பினர்களுடைய அபிலாஷைகளைப் பிரதிபலிப்பது குறித்துக் கவனம் செலுத்துதல்

இ) நிறைவேற்றுக் குழுவின் ஒருங்கிணைந்த தீர்மானம் மேற்கொள்ளல் செயற்பாட்டுக்குப் பங்களிப்பாற்றுதல்

ஈ) சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர், தத்தம் வகிபாகங்களை ஆற்றுவதற்கு உறுதுணையாக இருத்தல்

உ) நிறைவேற்றுக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ள உப குழுக்கள் அல்லது ஏதேனும் ஏனைய விசேட குழுக்களுக்குத் தலைமை தாங்குதல் மற்றும்/ அல்லது பங்களிப்பாற்றுதல்

ஊ) நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்குத் தொடர்ச்சியாக சமூகமளிப்பதை உறுதிப்படுத்துதல்

## 12. நிறைவேற்றுக் குழுவின் முகாமைத்துவம் மற்றும் கூட்டங்கள்

அ) சங்கத்தின் நிர்வாக விவகாரங்கள் நிறைவேற்றுக் குழுவினூடாக முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதுடன், நிறைவேற்றுக் குழுவானது அதன் நடவடிக்கைகளுக்காகத் தொடர்ந்து மற்றும் அவ்வப்போது கூடும், ஒத்திவைக்கும், அல்லது அது பொருத்தமானது எனக் கருதக்கூடிய வகையில் கூட்டத்தை ஒழுங்கமைக்கும்

ஆ) தொடர்ச்சியான நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள் குறைந்தபட்சம் மாதம் ஒருமுறையேனும் செயலாளரினால் கூட்டப்படும்; கூட்டம் கூட்டப்படுவதற்குக் குறைந்தபட்சம் ஐந்து நாட்கள் முன்பதாக அனைத்து நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கும் கூட்டம் பற்றி செயலாளர் அறிவிப்பார்.

இ) நிறைவேற்றுக் குழுக் கூட்டம் ஒன்றிற்கான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை **09 ஆகும்**.

ஈ) நிர்வாகப் பொறுப்பாளர்களுள் எவரேனும் 2 உறுப்பினர்கள் அல்லது நிறைவேற்றுக் குழுவிலுள்ள எவரேனும் 4 உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக அவசர மற்றும்/ அல்லது விசேட கூட்டம் ஒன்று கூட்டப்படலாம். செயலாளரினால் கூட்டப்படும் ஏதேனும் அத்தகைய அவசர மற்றும்/ அல்லது விசேட நிறைவேற்றுக் குழு கூட்டம் பற்றிய அறிவிப்பானது, அனைத்து நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கும் மூன்று நாட்கள் முன்பதாக விடுக்கப்படும்.

உ) கூட்டத்தின் போது முந்தைய கூட்டத்தின் அறிக்கை சமூகமளித்துள்ள உறுப்பினர்களுக்கு மத்தியில் வாசித்துக் காட்டப்பட வேண்டும் என்பதுடன், வேறு ஏதேனும் விவகாரங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு முன்பதாக அறிக்கையில் வாசித்துக் காட்டப்பட்ட அம்சங்கள் சரியானது மற்றும் உண்மையானது என சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

ஊ) தகுந்த காரணங்களுக்காக எவரேனும் உறுப்பினர் நிறைவேற்றுக் குழுக் கூட்டங்களுக்குச் சமூகமளிப்பதலிருந்து விலக்களிக்கப்படுவார். எனினும், அத்தகைய விலக்களிப்பைப் பெறுவதற்கான கோரிக்கையை உரிய அறிவிப்பு ஒன்றினூடாக அத்தகையவர் விடுக்க வேண்டும். அறிவிப்பு ஒன்றினூடாக அத்தகைய கோரிக்கையை விடுக்கத் தவறும் எவரேனும் உறுப்பினர், உரிய காரணமின்றி சமூகமளிக்கத் தவறியதாகக் கருதப்படுவார்.

எ) நிறைவேற்றுக் குழு கூட்டங்களின் போது கலந்துரையாடப்படும் அனைத்து விடயங்களினதும் இரகசியத்தன்மையை நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் கண்டிப்புடன் பேண வேண்டும்.

ஏ) எளிய முறையில் அணுகக்கூடிய வகையில் சங்கத்தினது நிறைவேற்றுக் குழுக் கூட்ட அறிக்கைகள் சரிபார்க்கப்பட்டு, நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கு கிடைக்கப்பெறச் செய்யப்படும். எழுத்துமூலமான கோரிக்கை முன்வைக்கப்பட்டால், அறிக்கையின் அதே வடிவம் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் கணக்காய்வாளர்களுக்குக் கிடைக்கப்பெறச் செய்யப்படும்.

## 13. சங்கத்தின் பெயரில் வங்கிக் கணக்கு ஒன்றைப் பேணி வருதல்

அ) இலங்கையிலுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வங்கி ஒன்றில் குறைந்தபட்சம் ஒரு (01) வங்கிக் கணக்கை நிறைவேற்றுக் குழு பேணி வர வேண்டும்.

ஆ) நடப்பிலுள்ள ஏதேனும் கணக்குகள் மூடப்பட வேண்டும் என நிறைவேற்றுக் குழுவின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தீர்மானிக்கும் வரை, அத்தகைய கணக்கு பேணப்பட வேண்டும்.

இ) நிர்வாகப் பொறுப்பாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தமது முதலாவது நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் பொருளாளர் உள்ளடங்களாக மூன்று உறுப்பினர்கள், வங்கியுடன் தொடர்புடைய கணக்குகள் மற்றும் பரிவர்த்தனைகளுக்கான உத்தியோகபூர்வக் கையெழுத்தாளர்களாக நிறைவேற்றுக் குழுவினால் பிரேரிக்கப்படுவார்கள்.

ஈ) பொருளாளர், செயலாளர் மற்றும் துணைத் தலைவர் உள்ளடங்களாக மேலதிக இரண்டு கையெழுத்தாளர்கள், வங்கியுடனான பரிவர்த்தனை நோக்கங்களை நிறைவேற்றுபவர்களாக இருப்பார்கள் என்பதுடன், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை வங்கியுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

உ) அதிகாரமளிக்கப்பட்ட இரண்டு கையெழுத்தாளர்களின் கையெழுத்துகள் ஊடாக மாத்திரமே வங்கியுடனான அனைத்துப் பரிவர்த்தனைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், நிறைவேற்றுக் குழுவினூடாக வழங்கப்படும் நிதிக்கான முன் அனுமதியின்றி அத்தகைய பரிவர்த்தனைகள் எதுவும் மேற்கொள்ளபட மாட்டாது.

## 14. சங்கத்தின் நிதி மற்றும் நிதிசார் முகாமைத்துவம்

அ) ப.மா.ச. - ஸா.க.மா.வின் நிதி தொடர்பான சகல அம்சங்களினதும் மீயுயர் பொறுப்பாளர்களாக நிறைவேற்றுக் குழு காணப்படும்.

ஆ) தேவைகளின் போது நிதியை வைத்திருக்கவும், அதனைப் பேணுவதற்கும், அவசியம் ஏற்படும் போது அதனைக் கையுதிர்ப்பதற்கும் நிறைவேற்றுக் குழுவுக்கு பூரண அதிகாரம் காணப்படும்.

இ) நிறைவேற்றுக் குழுவின் சுயாதீனமான நிதிகளினூடாக அது தன்னைப் பேணிப் பராமரிக்க வேண்டும்.

ஈ) நிறைவேற்றுக் குழுவானது, அதற்கான நிதித் திரட்டலின் போது ஏனைய வழிவகைகளுக்கு மத்தியில் பின்வருவனவற்றை நாட முடியும்:

- i. உறுப்புரிமைக் கட்டணம், வருடாந்த சந்தாக் கட்டணம் மற்றும் உறுப்பினர்களின் நன்கொடைகள்;
- ii. தனிநபர்கள், இலங்கை, மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களினூடாகப் பணமாகவோ அல்லது பொருளாகவே பெறப்பட்ட நன்கொடைகள்;
- iii. செயற்றிட்டங்கள்/ நிகழ்வுகளை நடைமுறைப்படுத்துவதனூடாக கிடைக்கப்பெறும் வருமானங்கள் அல்லது சேமிப்புகள்;
- iv. பொருத்தமான மற்றும் இலாபத்தை மையப்படுத்தி வருமானம்சார் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்திய பின்னர் கிடைக்கப்பெறும் மிகை;
- v. சங்கத்தின் நிலையான மற்றும் நடைமுறைச் சொத்துகளினூடாக ஈட்டப்படும் இலாபங்கள்;
- vi. ஏதேனும் சட்டமுறைச் சேவைகள், மூலங்கள், மற்றும் சட்டரீதியான வழிமுறைகளினூடாக மேற்கொள்ளப்படும் நிதித் திரட்டல்.

உ) ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதி சங்கத்தின் ஒரு நிதி ஆண்டாகக் கணக்கிடப்படும்.
ஒவ்வொரு நிதி ஆண்டுக்குமான நிதித் திரட்டல் செயற்றிட்டங்கள் உள்ளடங்களாக, ஒரு பாதீட்டு மற்றும் தொழிற்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுக் குழு தீர்மானித்து, அதனை அங்கீகரிக்கும்.

ஊ) சங்கத்தின் வருடாந்தப் பாதீட்டைக் கையாள்வதற்கான அதன் நிதிநிலையை உறுதிப்படுத்துவதற்கு அல்லது அவசியமெனக் கருதப்படும் வேறு ஏதேனும் தேவைகளுக்காக நிதித் திரட்டல் நிகழ்வுகள் மற்றும் செயற்றிட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுக் குழு ஏற்பாடு செய்யும்.

எ) சட்டரீதியாக மற்றும் நெறிமுறை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளைத் தொடர்ந்து, சங்கத்தினூடாகவே அனைத்து நிதிப் பரிவர்த்தனைகளும் மேற்கொள்ளப்படும்.

ஏ) 50,000 ரூபாவுக்கு மேற்படாத ஒரு தொகையை ஏதேனும் அவசர/ உடனடிச் செலவுகளுக்காகத் தன்னுடைய பூரண அதிகாரத்தின் கீழ் பொருளாளர் தன்வசம் வைத்துக்கொள்வார். ப.மா.ச. - ஸா.க.மா.வுக்குச் சொந்தமான எவரேனும் நிறைவேற்றுக் குழு உறுப்பினரால் திரட்டப்பட்ட, திரும்பப் பெறப்பட்ட அல்லது வேறு ஏதேனும் வழிவகையூடாக வைத்திருக்கக்கூடிய ஏதேனும் மேலதிகத் தொகையை உடனடியாகப் பொருளாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், அதனைப் பொருளாளர் அவ்வாறே வைப்பிலிட்டு விட்டு, அதற்காகப் பதிவு வைக்க வேண்டும்.

ஐ) இச்சங்கத்தின் ‘முகாமைத்துவச் செயல்முறைக்கு’ அமைவாகவே நிறுவனத்தின் நிதியுடன் தொடர்புடைய ஏனைய அனைத்துச் செயற்பாடுகளும் அமையப்பெறும்.

ஒ) பழைய மாணவர் சங்கத்தின் சொத்துகளைக் கையகப்படுத்துவதற்கும், திரட்டுவதற்கும், முகாமைத்துவம் செய்வதற்கும், முதலிடுவதற்கும், மற்றும்/ அல்லது பாதுகாப்பதற்கும் நிறைவேற்றுக் குழு கூட்டாகப் பொறுப்புடையது.

ஓ) ப.மா.ச. - ஸா.க.மா.வுடைய நிதிகளைப் பயன்படுத்துவதில் மிகப் பொருத்தமான, நெறிமுறை சார்ந்த, மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறை மற்றும் நடைமுறைகள் கையாளப்படுவதை நிறைவேற்றுக்குழு உறுதிப்படுத்தும்.

ஔ) நிறைவேற்றுக் குழுவின் ஒவ்வொரு பதவிக் காலத்தின் போதும், வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்படும் தகுதி வாய்ந்த ஒரு வெளிவாரிக் கணக்காய்வாளர் ஊடாக ஒவ்வொரு நிதி ஆண்டினதும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பேணப்படும் என்பதுடன், ஒவ்வொரு வருடத்தினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியறிக்கைகள் பொது உறுப்புரிமை மூலமாக சான்றுப்படுத்தப்படுவதற்கு வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

க) வெளிவாரிக் கணக்காய்வாளர், கல்லூரிக்கு அருகாமையிலுள்ள புகழ்பெற்ற மற்றும் பதிவுசெய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், ப.மா.ச. - ஸா.க.மா.வுடைய நிதிகளை முகாமைத்துவம் செய்தவற்கும், கையுதிர்ப்பதற்கும், பேணுவதற்குமான அறிவுரைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அவ்வப்போது அவர் வழங்குவார்.

## 15. கிளைகள் அல்லது இணை அமைப்புகள்

அ) கல்வி அமைச்சு முறையே 1694.11.20 எனத் திகதியிட்டு வெளியிட்ட சுற்றறிக்கை (1964ஆம் ஆண்டின் 27ஆம் இலக்கம்) மற்றும் 1995.05.21 எனத் திகதியிட்டு வெளியிட்ட திருத்தியமைக்கப்பட்ட சுற்றறிக்கைக் கடிதம் ஆகியவற்றுக்கு அமைவாக, ஒரு கல்லூரியின் 'பழைய மாணவர் சங்கத்துடன்' அதன் தலைமை 'தலைவர்' எனப் பெயரிடப்பட்ட சங்கம் தவிர்த்து வேறு எந்த அமைப்பும் செயற்படாது.

ஆ) மேற்குறித்த விடயத்தைக் கருத்திற்கொண்டு, இந்த யாப்பு நடைமுறைக்கு வந்தவுடன், 'மாவனல்லை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம்' என இந்த யாப்பினூடாக உருவாக்கப்படும் ஒரேயொரு சங்கம் மாத்திரமே பழைய மாணவர் சங்கமாகச் செயற்படும்.

இ) ஆயினும், நிறைவேற்றுக் குழுவுக்குள்ள முழுமையான நியாயாதிக்கத்தின் கீழ் மற்றும் அதற்குள்ள அதிகாரம் மற்றும் வல்லமையின் கீழ், 'இணை அமைப்புகளைத் தாபித்தல் மற்றும் உறவுமுறை வழிகாட்டி' ஒன்றினூடாக இணை அமைப்புகளை உருவாக்குவது குறித்துத் தீர்மானம் மேற்கொள்ள முடியும். அத்தகைய இணை அமைப்புகள் துணைத் தலைவர் மூலமாகத் தலைமை தாங்கப்படும் என்பதுடன், வருடாந்த அடிப்படையில் நிதி மற்றும் அதன் செயற்பாடுகள் சார்ந்து நிறைவேற்றுக் குழுவுக்கு அறிக்கை வழங்கும். இந்த யாப்பிலுள்ள ஏதேனும் விதிகளை மீறும் விவகாரத்திற்காக அல்லது ப.மா.ச. - ஸா.க.மா.வுக்கு அல்லது கல்லூரிக்கு அல்லது ப.மா.ச. - ஸா.க.மா.வின் அல்லது கல்லூரியின் நற்பெயருக்குக் களங்கம் வகையில் பாதகம்/ இரண்டகம் விளைவிக்கும் ஒரு காரியத்தை இணை அமைப்பு ஒன்று செய்துவிட்டதற்கான போதிய சான்று கிடைக்கப்பெறுவதால், அத்தகைய அமைப்பை தன் விருப்பப்படி கலைத்து விடுவதற்கான பூரண அதிகாரம் நிறைவேற்றுக் குழுவுக்கு உள்ளது.

ஈ) அனுபவம்/ நலன்சார் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட கனிஷ்ட பழைய மாணவர் சங்கம், பழைய மாணவர் சங்க வெளிநாட்டுக் கிளைகள் மற்றும் இணை அமைப்புகளின் உருவாக்கத்தை இந்த யாப்பு அங்கீகரிக்கிறது.

## 16. யாப்பில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள்

அ) வருடாந்த அல்லது விசேட பொதுக் கூட்டத்திலன்றி, சங்கத்தின் யாப்பைத் திருத்தவோ, மாற்றியமைக்கவோ, இரத்துச் செய்யவோ, அல்லது யாப்பிற்கு மேலதிகமாக எதனையும் சேர்க்கவோ முடியாது.

ஆ) வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் உள்ளடங்களாக பொது உறுப்புரிமையில் மூன்றில் இரண்டு (2/3) பெரும்பான்மை இல்லாமல், யாப்பில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் எதுவும் செல்லுபடியாகாது.

இ) அத்தகையதாக மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் யாப்பின் ஒரு பகுதியாக உடனடியாக அல்லது யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் நடைமுறைக்கு வரும் வகையில் அமுல்படுத்தப்படும்.

## 17. இந்த யாப்பு சங்கத்தின் மீயுயர் அதிகாரமாகச் செயற்படும்

அ) ப.மா.ச. - ஸா.க.மா. சார்ந்து முன்னெடுக்கப்படும் அனைத்து விடயங்களும், தீர்மானங்களும் இத்தால் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டுமென்பதுடன், இந்த ஏற்பாடுகளுக்கு முரணாக எவ்வித முடிவுகளோ, தீர்மானங்களோ அல்லது செயற்பாடுகளோ மேற்கொள்ளப்பட முடியாது

ஆ) மேலும், இந்த யாப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்பதாக உருவாக்கப்பட்ட அனைத்து முந்தைய யாப்புகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் யாவும் செல்லுபடியற்றதாகி விடும் என்பதுடன், இந்த யாப்பு நடைமுறைக்கு வந்தவுடன் ப.மா.ச. - ஸா.க.மா. தொடர்பான விவகாரங்களுக்கு அதிகாரமோ அல்லது அத்தகைய விவகாரங்களுக்கு அவற்றைப் பயன்படுத்தவோ முடியாது.

இ) ஆயின், எவ்வாறாயினும், இந்த யாப்பு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்பதாகச் செயற்பாட்டிலிருந்த, இத்தால் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணில்லாத ஏதேனும் விதிகள், ஒழுங்குமுறைகள், அல்லது துணை விதிகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

## 18. இந்த யாப்பு செல்லுபடியாகும் திகதி

வருடாந்தப் பொதுக் கூட்டம் அல்லது விசேடப் பொதுக் கூட்டம் ஒன்றில் சமூகமளித்திருக்கும் பொது உறுப்புரிமையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையின் ஊடாகச் சான்றுப்படுத்தப்பட்டு, அங்கீகரிக்கப்படும் தருணத்திலிருந்து இந்த யாப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன், அத்திகதியிலிருந்து செல்லுபடியாவதாகவும் இது இருக்கும்.